IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

		O.S. No.	:	35/2020
		P/W's	:	PW 2
DEPOSITION OF WITNESS			:	
NAME	V.பழனியாண்டி	CASTE	:	
S/O	(லேட்).வீரியன்	RELIGION	:	இந்து
VILLAGE	கச்சைகட்டி	CALLING	:	
TALUK	வாடிப்பட்டி	AGE	:	75

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.04.2026

குறுக்கு விசாரணை

1. எனது நிரூபண வாக்கு மூலத்திலுள்ள சங்கதிகளை நான் தான் சொன்னேன். வழக்கு சொத்து பற்றி எனது பத்து வயதிலிருந்தே தெரியும். நான் எந்த வருடம் பிறந்தேன் என்று எனக்கு தெரியாது. கச்சைகட்டியில் வடக்கு தெரு, தெற்கு தெரு என்று எந்த அடிப்படையில் பிரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் வடக்கு தெருவை சேர்ந்தவர். குடும்பன் காலாடியில் ஆகியோர் தலைமை பொறுப்பில் இருப்பார்கள் என்றால் சரியல்ல.

2. வடக்கு தெருவில் மாரியம்மன் கோவில் உள்ளது. அந்த கோவிலுக்கு தற்போது மளகரையான் வகையறா பூசாரியாக உள்ளார்கள். வாதியின் தாத்தா நாகு குடும்பனின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. நாக குடும்பன் பங்காளி சந்தன குடும்பனின் தகப்பனர் பெயர் தெரியாது. தாவா சொத்து கிராமத்திற்கு என்று பொதுவாக வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை என்ன காரணத்திற்காக வாங்கப்பட்டது என்றால் கோயில் கட்டுவதற்காக வாங்கப்பட்டது.

3. தாவா சொத்தை நாக குடும்பன் மற்றும் சந்தன குடும்பன் மட்டும் வாங்கவில்லை என்றாலும் ஆறு பேர் சேர்ந்து வாங்கினார்கள் என்றாலும் சரியல்ல. நாகு குடும்பன் அவரது சொந்த வருமானத்தில் கோயில் கட்டியதாக ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் வாதி தாக்கல் செய்திருக்கிறார். தாவா சொத்தில் சக்தி மாரியம்மன் கோயில் கிராம மக்கள் பொதுவாக கட்டியது என்றால் சரியல்ல. கோயில் அருகில் கிளை கோயிலாக ஒரு மாரியம்மன் கோயில் உள்ளது என்றால் சரிதான்.

4. அந்த கோயிலை கட்ட கிராமத்தின் சார்பில் இந்து அறநிலைத்துறையில் அனுமதி பெறப்பட்டது என்றால் சரியல்ல, வாதி தான் அனுமதி வாங்கினார். சின்ன மாரியம்மன் கோயில் வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது. வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் என்ன பிரச்சனை என்றால் வாதியின் இடத்தை பிரதிவாதி கேட்டு வாதி கொடுக்காததால் அவர்களுக்குள் பிரச்சனை.

5. பதினைந்து வருடங்களுக்கு முன் பிரதிவாதியின் தங்கை பாண்டியம்மாள் எனது தோட்டத்தில் ஆடு மேய்த்ததாக எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான், பாண்டியம்மாள் பிரதிவாதியின் தங்கை கிடையாது அந்த வழக்கு முடிந்து விட்டது. அந்த பிரச்சனையில் 1ம் பிரதிவாதி பஞ்சாய்த்து செய்தார் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் 15 நாள் நீதிமன்ற காவலில் இருந்தேன். பிரதிவாதிகள் பஞ்சாயத்தில் எனக்கு ஆதரவாக முடிவு செய்யதால் தான் அவர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எங்கள் ஊர் நீலமேகப் பெருமாள் கோவிலில் கார்த்திகை மாதம் பட்டாபிஷேகம் நடக்கும் என்றால் சரிதான். அந்த விழாவின் போது அந்த கோயில் பூசாரி தான் தீபம் சுற்றுவது போன்றவைகள் செய்வார்கள் என்றால் சரியல்ல வாதி செய்வார். அந்த கோயில் திருவிழாவை வடக்கு மற்றும் தெற்கு தெருவை சேர்ந்தவார்கள் ஒன்றாக கொண்டாடுவார்கள். அப்போது வடக்கு தெரு கோயில் பூசாரிக்கும் தெற்கு தெரு கோயில் பூசாரியான 1ம் பிரதிவாதிக்கு பரிவட்டம் காட்டுவார்கள் என்றால் சரியல்ல.

7. எனது வாக்கு மூலத்தில் வாதி தலைமுறை தலைமுறையாக வழக்கு கோயிலின் பூசாரியாக உள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ஊர் மக்களின் மேல் உள்ள கோபத்தில் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி வழக்கு கோயில் பூசாரியாக அவரது தாத்தா காலத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

8. வழக்கு சொத்தை வாங்கிய 6 நபர்களில் பிரதிவாதியின் தந்தை ஒருவர் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் தந்தை தெற்கு தெருவை சேர்ந்தவர் என்றாலும் வழக்கிற்காக அதை மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வாக்கு மூலத்தில் 1ம் பிரதிவாதி 1990ல் தான் எங்கள் கிராமத்திற்கு குடிவந்ததாக

சொல்லியுள்ளேன் என்றாலும் 1990 ல் அவர் அரசு வழங்கிய நிலத்தில் வீடு கட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

9. பிரதிவாதியின் தாத்தா ஆதி குடும்பன் அவரது மகன் பழனியாண்டி குடும்பன் என்று வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும் அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமலும் வழக்கு சொத்துப்பற்றி தெரியமாலும் வாதிக்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.